## கடற்கரை சாலையில் துவங்கியது

# ‘அந்தகால’ புகைப்பட கண்காட்சி

புதுச்சேரி, பிப்.26: புதுவை கடற்கரை சாலையில் பிரெஞ்சு ஆய்வு நிறுவனமும், பாண்டி ஆர்ட் அமைப்பும் இணைந்து தமிழ் பாரம்பரிய குடும்பங்கள் தமிழ் புகைப்பட கலை– நிலையங்களின் வரலாறு (1880–1980) என்ற தலைப்பில் புகைப்பட கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளது. நேற்று (25ம் தேதி) தொடங்கிய இக்கண்காட்சி மார்ச் 24ம் தேதி வரை நடக்கிறது.

பிரெஞ்சு ஆய்வு நிறுவன சமூக அறிவியல் துறை ஆய்வாளர் ஜோயி ஹெட்லி, பிற இந்திய மற்றும் பிரான்ஸ் ஆய்வாளர்களால் தமிழகம் முழுக்க சேகரிக்கப்பட்ட பழைய புகைப்படங்கள் இதில் இடம் பெற்றுள்ளன. தொடக்க நிகழ்ச்சியில் பிரெஞ்சு ஆய்வு நிறுவன இயக்குனர் பெரி கிரார்டு மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

கண்காட்சியில் இடம் பெற்றுள்ள புகைப்படங்கள் தமிழ் குடும்பங்களின் வரலாற்றை வெறும் காட்சி ரீதியாக மட்டும் வெளிப்படுத்தாமல், அவர்களின் சமூக வரலாற்றையும், குடும்ப பாரம்பரியத்தையும், உடை, பொருளாதார பின்புலம் குறித்தும் விளக்குகிறது. இந்த மரபு வரலாற்றை பாதுகாக்க, பிரெஞ்சு ஆய்வு நிறுவன குழுவினர் இந்த புகைப்படங்களை மின்னணு ஆவணமாக மாற்றி நூலகத்தில் பயன்பாட்டிற்கு வைக்க உள்ளனர்.

புதுச்சேரி பாரம்பரிய திருவிழாவின் ஒரு பகுதியாக பழங்கால புகைப்பட நிலையங்களில் பின்பற்றிய கலைநயத்தையும், பழமையான மரபு கலையும் காட்சி பிரதியாக மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.



புதுவை கடற்கரை சாலையில் அந்தகால புகைப்பட கண்காட்சி நேற்று துவங்கியது. அதில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள புகைப்படங்களை போட்டோ எடுக்கும் வெளிநாட்டு சுற்றுலா பயணி.